வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 552/2020

வழக்கு சாட்சி PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நந்தகுமார் , உதவி ஆய்வாளர், எம்.3 புழல் , காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | மாதவன்பிள்ளை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 58 |

தேதி 30.04.2025

எதிரிர்ள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது எம்.3 புழல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த ஆய்வாளர் திரு. நட்ராஜ் அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் கால விரையம் கருதி வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். 28.09.2018 அன்று காலை 11.00 மணிக்கு இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக காவல் ஆய்வாளர் நட்ராஜ் நிலைய பணியில் இருந்தபோது ராகேஷ் என்பவர் அளித்த புகாரினை பெற்று எம்.3 காவல் நிலைய குற்ற எண். 617/2018 இதச பிரிவு 307, 341, 294(b), 336, 427, 397, r/w 506(ii) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். மேற்படி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது முறையே அ.த.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் ராகேஷ், குணசேகரன், பாலாஜி, ஸ்டீபன், மனோஜா ஆகியோர்களை விசாரித்து தனிதனி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே சாட்சிகளான செல்லையா, ஆண்ட்ரூஸ் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்துள்ளார். அவை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும். அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவ இடத்தில் உடைந்த கண்ணாடி கூல்டிரிங்ஸ் துண்டுகள் 15, சிறிய கருங்கற்கள் 6 ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்பு கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். மேற்படி கைப்பற்றுதல் மகஜரானது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்றைய தினமே எதிரிகளை

02.30 மணிக்கு கதிர்வேடு பிஆர்ஹெச் ரோட்டில் உள்ள ஒயின் ஷாப் அருகே கைது செய்து 1ம் எதிரி தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் திவாகர், சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான " நான் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என்ற பகுதி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் வழக்கு சொத்தான கத்தியை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 2ம் எதிரி மணிகண்டன் என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலததை அதே சாட்சிகள் முன்பு பதிவு செய்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான " நான் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என்ற பகுதி அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் வழக்கு சொத்தான கத்தியை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இவ்வழக்கின் புகார்தாரருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த ஸ்ரீகுமரன் மருத்துவமனை மருத்துவர் தமிழ்மதன் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றினை பெற்றுள்ளார். மேற்படி விபத்து பதிவேடானது மற்றும் காயச்சான்றானது அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவு 307, 341, 294(b), 336, 427, 397, r/w 506(ii) @ இதச பிரிவு 307, 341, 294(b), 336, 427, 392, r/w 506(ii) சட்டப்பிரிவு மாற்ற அறிக்கை மூலம் சட்டப்பிரிவுகளை மாற்றி எதிரி மீது விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கையானது காவல் ஆய்வளார் ஜகந்நாதன் என்பவர் தாக்கல் செய்துள்ளார். மேற்படி சட்டப்பிரிவு மாற்ற அறிக்கையானது அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

## குறுக்கு விசாரணை

ஆவணங்கள் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். எதிரியிடம் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிமீது அளித்த பொய்யான புகாரினை முறையாக விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைதது ஆவணங்களை தயார் செய்து பொய்யாக இறுதி அறிக்கையானது எதிரிமீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**